1981 பிப்ரவரி 10

6. அறிவிப்பு

நீர்ப்பாசனத் துறையின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மேலவையில் இருப்பதால் நீர்ப்பாசனத் துறை குறித்த திருத்த அறிக்கை பின்னால் எடுத்துக் கொள்ளப்படும்.

7. கவன ஈர்ப்புகள்

செங்கல்பட்டு மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம்

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, விதி 54-ன் கீழ் ' செங்கற்பட்டு மாவட்டம் கரிமணல் பஞ்சாயத்தைச் சேர்ந்த திருமலைநகரில் ஏற்பட்ட மோதலில் மீன்பிடி சாதனங்களை இழந்து தவிக்கும் மீனவர்களுக்கு நிவாரண உதவி அளிக்க வேண்டிய அவசியம் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை

செங்கற்பட்டு மாவட்டம் கரிமணல் பஞ்சாயத்திலுள்ள திருமலை நகரில் அங்குள்ள மீனவர்களுக்கும் அதன் பக்கத்துக் கிராமங்களிலுள்ள மீனவர்களுக்கும் பழவேற்காடு ஏரியில் மீன் பிடிப்பது குறித்து 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 ஆம் நாள் அன்று கலவரம் ஏற்பட்டது. அன்று பிற்பகல் காவல்துறையினரும் வருவாய்த் துறையினரும் அங்கு விரைந்து சென்று நிலைமையைக்கட்டுப்படுத்தினர். மறுநாளே வருவாய்த்துறை மூலம் ஊர் குடியினர் அனைவருக்கும் 10 மூட்டை அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டது, தீயினால் பாதிக்கப்பட்ட நாற்பத்தேழு குடிசைகளுக்காக ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 200 வீதம் மொத்தம் ரூபாய் 9,400 வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 10] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

2. திருமலை நகர் குப்பத்தில் வசிக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மேலும் உணவும், உடையும் ரூபாய் 15,015 செலவில் அளிப்பதற்கான மீன்துறை இயக்குனரின் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

3. மீன்பிடி சாதனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றிய விவரங்களை மீன்துறை இயக்குநர் சேகரித்து வருகிறார், சாதாரணமாக இயற்கையின் சீற்றத்தாலும், விபத்துக்களாலும் மீனவர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு அரசு தக்க நிவாரணம் உடனடியாக அளிக்கிறது. ஆனால் திருமலை மீனவர்களுக்கு கலவரத்தால் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆதலால் முழு விவரங்கள் கிடைக்கப்பெற்றதும் மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றி விரைவில் அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி செங்கற்பட்டு மாவட்டத்தில் பொன்னேரி தொகுதியைச் சேர்ந்த திருமலைநகர் என்ற பகுதியாகும் அந்தப் பகுதிக்கு சுலபமாக யாரும் செல்ல முடியாது. என்னையும், அந்தத் தொகுதியிலிருந்து வரக்கூடிய யாராவது ஒரு உறுப்பினரையும் தவிர மற்றவர்கள் சுலபமாகப் போக முடியாது. அது தமிழகத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், தமிழகப் பகுதியிலேயிருந்து நீராலே பிரிக்கப்பட்டு, 3, 4 மைல்களுக்கு பழவேற்காடு ஆற்று நீராலே பிரிக்கப்பட்டிருக்கிறது. தீவுபோல் இருக்கிறது. நான் கூட அங்கே எப்படிப் போனேன் என்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எப்படிப் போனீர்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு போனால் நீண்டு கொண்டே போகும். உங்களுக்கு 2 கேள்வி கேட்க அனுமதியுண்டு. அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இந்த இடத்திலே கலாமிட்டீஸ் ஏற்பட்டால் கூட கடன் வாங்க முடியாது. அப்படி ஒரு தீவு போன்ற இடம். இங்கே 50 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு நீங்கள் ரூ. 200 தந்து இருக்கிறீர்கள், ரெவின்யூ டிபார்ட்மென்ட் மூலமாக. அதுகூட வீடு கட்டத்தான் கொடுத்திருக்கிறீர்கள். தொழிற்கருவிகள் வாங்குவதற்கு எந்தவித உதவியும் செய்யப்படவில்லை. இரண்டு

மாதங்களாகியும் இன்னும் நீங்கள் எதுவும் செய்யவில்லை. கடந்த 12 ஆம் தேதி நடைபெற்றது, இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டதல்ல என்று சொல்லப்படுகிறது—இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டால்தான் தரவேண்டுமென்று கன்வென்ஷன் நமக்கு இல்லை.

முன்பே ஒருமுறை பழவேற்காடு பகுதியில் கொடுத்திருக்கிறோம். முந்திய அ.தி.மு.க. அரசாட்சி காலத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்மாதிரி இருக்கிறது. எனவே அவர்களுக்கு தொழிற்கருவிகள் வாங்குவதற்கு உதவி செய்து, எவ்விதத் தொழிலும் செய்ய முடியாமல் இருக்கும் அந்தத் தொழிலாளிகளுக்கு இந்த அரசு உதவி செய்வதன் மூலம் அவர்கள் வறுமையை நீக்கி, கொடுமையில் இருந்து அவர்களை காப்பாற்ற ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு அறிக்கையிலே உடனடியாக செய்யப்பட்ட உதவிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. மீன் பிடி சாதனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு பற்றிய விவரங்களெல்லாம் மீன்துறை இயக்குநரை கேட்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து அறிக்கை வந்தவுடன் அரசு உரிய பரிசீலனை செய்யும். இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட இழப்புகளுக்குத்தான் நிவாரணம் தரலாம் என்று கன்வென்ஷன் இருந்தாலும் கூட, கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், ஏழை மக்களின், ஏழை மீனவர்களின் துயர் துடைப்பதற்காக இந்த அறிக்கை வந்த பிறகு உரிய அனுதாபத்துடன் இந்தப் பிரச்சினை குறித்து கவனிக்கும். நிவாரணம், பரிசீலனை செய்த பிறகு முடிவு செய்யும்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, நம்முடைய பிஷரீஸ் டைரக்டர் விவரங்களைக் கலெக்ட் பண்ணிக் கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். கடந்த திங்களே, நானே அமைச்சரைப் பார்த்தேன். அது டைரக்டரிடம் இருந்து, கலெக்டர் ரிப்போர்ட்டாக வந்து, டைரக்டரிடம் வந்து, செக்ரட்டரியிடம் போன மாதமே வந்துவிட்டது. நான் தங்களையே பார்த்தேன். நீங்கள்தான் எனக்கு டைரக்ஷன் தந்து செக்ரட்டரியைப் பார் என்று சொன்னீர்கள். அவர் உடனே, தன்னுடைய சபார்டினேட்டை பார்த்து, அவனை அழைத்துச் சொன்னார். ஒரு மாதம் ஆகிறது. இது வரையில் தரவில்லை.

(முற்பகல் 10–50)

மேலும் அவர்கள் குடிசை போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் மீனவர்களுக்காக வீடுகள் கட்டுகிறோம் என்று அரசாங்கம் சொல்கிறது. கட்டுகிறார்களா

இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இரண்டு கிராமத்தைச் சேர்ந்தவர்களை 22 கிராம மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதால் அந்தப் பகுதி மக்களின் குடிசைகள் தீக்கிரையாகாத வகையில் தமிழகத்தில் இராமநாதபுரம் பகுதியில் கட்டியிருப்பதாக சொல்லப்பட்டிருப்பதுபோல், அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்வது போல், இந்தப் பகுதிக்கும் முன்னுரிமை கொடுத்து, நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை அறிந்து தான் நிவாரணம் அளிக்க முடியும். அதற்கான தகவல்களை இயக்குநரிடமிருந்து கேட்டு இருக்கிறோம். வந்தவுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி வருவதற்குக் காலதாமதம் ஆனால், அரசே வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : '' வட ஆற்காடு மாவட்டம் காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகளுக்குத் திடீரென நோய் ஏற்பட்டிருப்பது குறித்து '' திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், ரா. கிருஷ்ணன், என். ஏ. பூங்காவனம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, '' வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடி, குடியாத்தம் பகுதிகளில் கால்நடைகளுக்குத் திடீரென நோய் ஏற்பட்டு இருப்பது குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.